AMNA
ஆதி மார்க்க னீதி அவை

# ஆதி மார்க்க னீதி மொழி

May 2025

*இதழ் 46 – மே மாதம் 2025 வெளியீடு*
*© AMNA Trust, Chennai*



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி அவர்களின் அருளாசியுடன் இன்று இந்த ஆதி மார்க்க நீதி மொழி மின்னணு சஞ்சிகையின் 46ஆவது இதழ் உங்கள் கைகளில் மெய்ம்மணம் கமழ மலர்ந்துள்ளது. சமீபத்தில் மலர்ந்த 2024ஆம் ஆண்டு மலரின் அத்தனை முன்னுரைகளின் மெய்ஞ்ஞான அடி நாதமான அம்சம் போல் மே மாத இவ் இதழின் முன்னுரையிலும் மெய்ஞ்ஞான அடிநாதமான, பிறவாமை, தன்னை அறிதல், ஜீவனைக் காணுதல், ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் அடைதல், பிறவிப் பிணி தீர்வதற்கான நாத மருந்தை உட்கொள்ளுதல் முதலியன பொதிந்து உள்ளன.

எம்பெருமான் ஸ்ரீலஸ்ரீ சாலை ஆண்டவர்கள் இப்படியான நிலை யாவற்றையும் தங்களின் ஆதி மெய் உதய பூரண வேதாந்தம், திரு மெய்ஞ்ஞானக் கொரல், கோடாயிதக்கூர், ஆதி மான்மியம் ஆகிய வேத வேதாந்தத்தின் மூலமாக அருளியுள்ளார்கள். இவை யாவும் மக்களுக்கு நிஜமாக வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கமுடன் இயங்குவதே இந்த ஆதி மார்க்க னீதி அவை. இயேசுவின் நாமம் ஜெயம், இயேசுவின் இரத்தம் ஜெயம் என அவரின் நாமத்தை இவ்வுலகில் பிரகடனம் செய்வதின் உண்மை நோக்கம் யாதென அறியாததே இவ்வுலகம். நம் தந்தையை ஒருவன் மரணிக்கச் செய்து உன் தந்தையின் இரத்தம் ஜெயம் எனக் கூறினால், அதை நீதியும் ஏற்காது, நாமும் ஏற்பதில்லை. மாறாக இரத்தத்திற்கு இரத்தம் என்ற பழி தீர்க்கும் எண்ணமே மேலோங்கி நிற்கும். இயேசு பிரான் அருளிய பரிபாஷையே, என் இரத்தத்தை பானம் பண்ணாதவனும் என் மாமிசத்தை புசியாதவனும் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் இதை மெய்யாக மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன் என்பதாகும். அப் பெருமான் பேரிரக்கம் கொண்டு வெளியாக்கிய அத் தேவரகசியச் செயலின் நோக்கம் அதன் பொருளறிந்து உணர்ந்து பிறவிப்பிணி தீர்க்கும் பெரும் செயல் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதற்கே. இதுவே இன்று நமது ஆதி மார்க்க னீதி அவையின் அனைத்து காணொளி காட்சியின் அடிநாதமாகும்.

எண்ணிலா நிலைகளில் சாலை ஆண்டவர்கள் அருளிய ஜீவனின் ரகசியம் இன்னதென, ஆசான் அருளால் அறிந்து உணர்ந்து யாம் இறுமாப்பின்றி இயம்புவது மக்கள் யாவரும் உணர்ந்து உய்ய வேண்டும் என்ற காருண்ய நாட்டம் கொண்டேதான். இப்படியான உண்மையை உணர்ந்தவர்களே என் அவையின் அங்கங்கள். இது தங்களுக்கும் வேண்டும் என எதார்த்த எண்ணமுடன் வரும் யாவர்க்கும் இந்த அவை கதவுகளற்ற திறந்த வீடாக என்றென்றும் வரவேற்க



Copyright © AMNA Trust, Chennai 

**காத்திருக்கிறது. நல்லுள்ளம் கொண்ட நன்மக்கள் யாவரும் நற்கதி பெற வேண்டி நவிலும் இம் முன்னுரையைப் பார்த்துப் படித்துப் பயன் பெற விழையும் யாவரையும், எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*மனித உருவில் இருப்பவர்கள் எல்லோரும் ஒரே மாதிரிதானே இருக்கிறார்கள். இதில் தேவர்கள், மனிதர்கள் என்று பிரித்துச் சொல்வது எப்படி? எங்களைப் போலத் தானே னீங்களும் இருக்கிறீர்கள் என்று சிலர் கேட்கிறார்கள், என்று ஒரு மாணவர் திருச்சபையில் சொல்ல,*

*ஆண்டவர்கள்:- அவன் ஒரு ஜாதியிலேயே இன்னும் பிறக்கவில்லையே; னரனாகத்தானே இருக்கிறான். அவன் தன் ஜாதியிலேயே தள்ளப்பட்டவனாக இருக்கிறானே. அதை னினைக்காமல் பிறருக்கு ஞாயம் வேறே பேசவருதே அந்த உருவம். அது என்ன வேண்டுமானாலும் பிதற்றும். அதன் பேச்சை ஒரு பேச்சென்று னாம் கேட்டுக்கொள்ளுவதா? அவனை வேதம் மதிக்கிறதா? இல்லையே. தான் பிறந்த ஜாதிக்குத் துரோகி அவன். அவன் சொல்லும் ஞானம் எப்படிப்பட்டதாக இருக்கும்? அது பாவமாகத்தான் இருக்கும். ஏன்? அவனே பாவியாக இருக்கிறான். அவன், தான் இன்ன ஜாதி என்று சொல்லிக்கொள்ளுகிற அந்த ஜாதியில் இன்னும் னிஜமாகப் பிறக்கவில்லையே. காயத்திரி மந்திரத்தை அவன் வாயில் சொல்லுவதும், னாம் அந்தக் கோடி சூரிய அலங்கார ரூபத்தை னேரில் தெரிசனையாகக் காண்பதும் இரண்டும் ஒன்றா? னாம் அந்தக் காயத்திரி மந்திரத்தைச் சொன்னதும், அது னமக்குத் தோற்றத்தில் னின்று னம்மைப் பிரம்ம லோகத்தில் ஏற்ற, அதையே அவன் வாயில் சொல்லிக் கீழ்த்தர னரகத்திற்குப் போகிறானே இரண்டும் ஒன்றாகுமா?*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 ஏப்ரல் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 மே மாதம் வெளியீடு

## 03-04-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **ஓதுமறை வேதனெறி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அறிவை அறிந்து இறைவனை அறியும் நாளே லைலத்துல் கதிர் ரா, சிவன் ராத்திரி, வைகுண்ட ஏகாதசி, எட்டாம் நாள் ரா என்பதாகும். இவை அறிவைப் பெற்ற ஆதி மார்க்க னீதி அவை மக்களுக்கு நிஜமாக வாழும் கலையாக அருளப்பெற்றுள்ளது. ஊனக் கண்ணால் காணும் யாவும் மாற்றத்துக்கு உரிய பொய்யே என்பதனை **மெய்யென்றவர்களும் வாய் புலம்புவதலால் அறியார்** என சாலை ஆண்டவர்கள் அருளி உள்ளார்கள்.

**திருமெய்ஞானக் கொரல் வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:** தன்னையறியும் பேரறிவே மனிதன் பெற்ற தனிச்சீதனம். பிறப்பு இறப்புக்கு காரணமாக எண்ணமும், அவரவரின் நாமத்திற்கான பொருளாக மூலமந்திரமும் உள்ளது. எல்லா உயிர்களிடத்தும் இறைவன் பிராணாம்பிகை தாயாக வீற்றிருப்பதை அவனின் சாயலாகிய தொனியில் படைக்கப் பெற்ற மனிதனே அறிவான்.

**தௌஹீது காமீல் - குருபிரான் அருளமுதம்:** இறைவன் நின்று விளையாடும் இறை இல்லமே தௌஹீது ஆகும். செம்பொருளாம் ஜீவனின் இருப்பிடமே கங்குல் பகலற்ற, மெஹராஜ், கைலாயம், வைகுண்டம். இதனை குருவருளால் அறிந்த வள்ளல்பிரானவர்களும் **தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே...** என தான் பெற்ற அனுபவத்தை அருளியுள்ளார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 05-04-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப்பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தனித்த னற்றலைமைப் பெரும்பதியரசை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் குமார்:* தனித்தலைமை பெரும்பதியாக வரும் பெரியோர்களின் திருவடியில் சரணடைந்த மக்களின் பவப்பிணி தீர்ப்பதே மெய்வழித் துணை மருந்து. அதுவே அறுசுவையுடன் கூடிய அமுதத் தமிழால் வான நாட்டிலிருந்து வேதங்களாக அருளப்பெறுகிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 206** நான் மறை அரசராகிய நபிகள் நாயகம், **உலகம் முழுதும் ஒரே மெய்வழிச் சபை தான் உண்டாகி இருக்கும்** என அருளிய தீர்க்க தரிசனம், அவரவரின் தன்னுலகை உணர்த்தும் ரகசியமாகும். ஒரு பிரம்மநிஷ்டரின் பெருங்கருணையே நம்மை உத்தியோவனத்தில் குடியேற்றி உயர்குடியில் வாழச்செய்கிறது.

*ஜீவசகோதரர் குமார்:* **பரிசுத்த வேதாகமம் - வெளிப்படுத்தின விசேஷம்- 21:5** மனிதனின் சுத்தத் துறை இருதயமே தேவனின் வாசஸ்தலமாகும். கர்த்தராகிய குருபிரானின் னாதமே



Copyright © AMNA Trust, Chennai

வானுலகின் பெரும் சத்தமாக ஒலித்து, இறைவனின் சாயலாகப் படைத்த மானிடரை மாமிச இச்சையிலிருந்து மீட்டு, மா அம்சம் பொருந்திய முத்தி தேகத்தில் சேர்க்கிறது. விதி வசத்தில் சிக்கிய நம்மை மதி வசத்தில் மாற்றி மாசற்ற மோட்ச வாழ்வில் குடியேற்றி வைக்கும் ஆசானின் திருவடி பணிந்து அனைவரும் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக! எனும் பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 06-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் பொற் பாதம் போற்றி வணங்கி அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* **வைகுண்டம் காண வந்த தர்மி எல்லோரும் மெய்குண்டம் கண்டோம் என்றிருப்பார் அவ்வனத்தே** எனும் தீர்க்கதரிசனத்தின் படி குழப்பமுற்ற நம் தன்னுலகை தெளிவிக்க அவ்வு முதல் கொண்டு யுகந்தோறும் வரும் பெரியோர்களே அவதாரம். நீதியெனும் பொருளான மனுவுக்கே அறிவெனும் அகரமாகிய ஜீவனை அறியும் அறிவு உள்ளது. காலக் கிரகங்களால் வீணாகும் நம் வாழ்நாளை மீட்கும் கோளரி வாளரே ஆசான். அவரின் அருள் மொழி கொண்டு அவரவருள் விளங்கும் அமானிதப் பொருளை காண்பதுவே அதிசயம். தாய் தந்தையாக வரும் குருவாகிய இறைவனின் அருளால் பற்றற்றான் பற்றைப் பற்றி அடைவதே நித்திய வீடு. சிக்குப் பலகை போல் சிக்கென இறைவனைப் பற்றிட ஒலிக்கும் ஓங்கார தொனியே ஆசானின் வாய்மை. அதனை செவிமடுத்து அவரவரும் தன் நெஞ்சகமாகிய நடு வீட்டில் குடியேறி ஓரறிவாக விளங்கும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதே துக்க நிவர்த்தி சுகபிராப்தி.

*ஜீவசகோதரர் குமார்:* செல்லும் நாள் சென்றிடாது காக்கும் அறிவே நம் ஆறாம் அறிவு. தன் எனும் ஜீவ குகையில் நிஜமான தொழுகையை கற்பிக்கும் குருவே நித்தியன். வித்தில்லா வித்து விதைக்கும் குருவின் திருத்தாள் பணிந்து அழி அவா மனதை வென்று உணர்வெனும் கம்பம் ஏறி மெய்யுணர்வு பெற்ற நன் மக்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 06-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙம திடத்தி லைம்புலக் கதவை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

நாம, ரூபமற்ற காரண தேகம், ஓர் வடிவெடுத்த பிறகே தாய், தந்தை, ஜாதி, குலம் என நாம் அடையாளம் பெறுகின்றோம். சார்ந்ததின் வண்ணமாக மாறுவதே பிறப்பின் ரகசியமாக உள்ளது.

*ஜீவசகோதரி செல்வி:* நம்மிடம் இருக்கும் நான் எனும் அகந்தை அழிந்து ஆசானிடம் முழுமையாக தஞ்சம் அடைந்து ஞான பாதையில் பயணித்து வாழும் வாழ்வே பேரின்ப வாழ்வு.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* நமது மனம் ஆசான் அருளமுதால் அறிவாக மாறி அவரவரின் சொந்த வீடாகிய தன் எனும் ஜீவகுகையில் ஒடுங்குவதே சுகம். பிறவிப் பிணி தீர்க்கும் ஆசானின் நாத மருந்து கொண்டு காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிந்தால் நம் பாவம் புண்ணியமாக மாறும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் குபேர்:* சிவபதத்தில் சேர்க்கும் ஆசானின் பெருங்கருணையே எமன் வாயிலிருந்து நம்மை மீட்கிறது. ஜலத்தினில் அக்னி உருவாய் இருக்கும் அத்திவரதரை னித்தம் தரிசனம் காணும் செயல் ஆசான் அருளால் அனைவரும் பெறலாம் என்பது சத்தியமே.

*ஜீவசகோதரர் வாசுதேவன்:* பிறவாமை ஒன்றே நம் பிறவியின் நோக்கம் என்பது குருவின் தயவால்தான் அறிய முடியும். ஐந்து எழுத்து மந்திரமாகிய நமது சொந்த இல்லத்தை உணர்த்துவதே கோவில்கள். அருட்பெரும் ஜோதியாக வரும் ஆசானின் நாதமே கோடி சூர்யப் பிரகாசம்.

*ஜீவசகோதரர் மஞ்சுனாதன்:* உடல் பொய் உயிர் மெய் என நம்மை உணரச் செய்பவரே மெய்ஆசான். அழி அவா ஆசையின் கர்த்தாவான மனம் அறிவாக மாறி பிறவாமை பெற வழி காட்டுபவரே கர்த்தராகிய குருபிரான்.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* அகங்கார மனம் ஓர் பிரம்மம் என நம்மை அறிய செய்யும் எதார்த்த தேவகுரு அதனை அறிவாக மாற்ற செய்யும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரர் ஸ்ரீதுல்தாஸ்:* மெய்யின் இருப்பிடம் பொய். பிரம்மத்தில் தோன்றும் அனைத்தும் அதில் மறைவதை உணர்த்தி நம் மாயத்திரை அகற்றுவது ஆசானின் பெருங்கருணையே.

**குருபிரான் அருளமுதம்:** அந்தகரணக் கூட்டத்துள் மறைந்துள்ள அமானித சிறப்பை அறியச் செய்வதே யோக வாசிஷ்டம். அமானிதத்தின் சிறப்பை அறிவதே நம் முதற்கடமை என்ற அறிவுத்தெளிவு பெற்ற மக்களாக நாம் இருக்க வேண்டும் என்ற ஆசீர்பாதத்துடனும், பரிசுத்த ஆவித்தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 10-04-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்…** எனும் ஞானமுறையீடு திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பூமி எனும் தன்னுலகில் புலன்கள் அடங்கி ஜீவன் நிர்விகார நிலையில் நிற்பதுவே நிர்வாணம். துறவு இன்னதென அறிந்து அவரவரின் திரு விழாமல் காக்கும் செயல் பழக வழிகாட்டும் தலமே ஆதி மார்க்க னீதி அவை.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண் 06ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:** ஜீவேசப் பொருளான அறிவைத் தன்னில் அறிவதே சிவலோகம் சேர்க்கும். அவரவரின் நாமத்திற்குரிய பொருளின் வடிவை அறிய உண்டாக்கப் பெற்றவையே பழம் புராதனக் கோயில்கள். முக்குணங்கள் மேகம் சூழ்ந்த வானமாகவும், நிர்க்குணம் நிர்வாணமாகவும் விளங்குவதே இரு விசும்பு. எதார்த்த உள்ளம் கொண்டவர்க்கே ஞானம் மிக எளிதாக வாய்க்கும்.


**தௌஹீது காமீல் - குருபிரான் அருளமுதம்:** இறைவனின் நாமமே மஹபூபு. ஜீவனே சத்து சித்தாக மஹத்தாக சுத்த யதார்த்தமாக நின்று விளங்கும் திருச்சிற்றம்பலப் பொருள். கோள்கள் மனதுடன் சேர்ந்து பனிரெண்டு ராசியாக கலைகளாக பிரிந்து ஒடுகிறது. அது **ம்** எனும் மூலத்தில் ஒடுங்கும் ரகசியத்தை அருள்பவரே சுபஹானல்லாஹ். ஐவழிக்கு அப்பால் உள்ள உறக்கம் அணுகா உன்னத தௌஹீது எனும் சுத்தத் திருவடியைப் பற்றித் தொழுது பத்தியத்திடத்துடன் இருப்பவரே தௌஹீது காமீல்.

நம் தேகமே இறைவனின் திருமாளிகை எனும் குருபிரானின் ஆசீர்பாத அருளமுதுடன் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai May 2025

## 17-04-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்



பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய பிள்ளைத்தமிழ் பாடலுடன் அவை மலர்ந்தது.

**எமன்படர்அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:** தன் எனும் ஜீவகுகையில் வீற்றிருப்பதே விஸ்வரூபம். அவரவரின் அகத்தே இருக்கும் ஒளியுடம்பாகிய ஜீவனைக் காண்பதே ஜென்ம சாபல்யத்திற்கான வழி. தன்பெருவெளியே சாலையாகவும் மெய்மேனியாகவும் உள்ளதை அறிந்தவருக்கே சாலை என்ற பெயர் பொருந்தும். கற்பைப் போல் காப்பாற்ற வேண்டிய மெய்ஞ்ஞானத்தை சுமை ஆக்காமல், அறிவின் சுவையாகத் தந்து அருள்பவர்களே பெரியோர். மெய் ஆசானின் துணையுடன் எமன் கண்டு அஞ்சுகின்ற தேகத்தில் குடியேறி ஜீவசிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து கொள்வதே அடக்கம், அவ்வு, அகரம் என்பதாகும். மெய்வழி ஆண்டவர்கள் ஜீவனைக் குறித்தே அருளியுள்ள சகல பாடல்களும் பாமரர் அன்றி பண்டிதர்களே அறிவர்.

**தௌஹீது காமில் - குருபிரான் அருளமுதம்:**
மெய்க் குருபிரானின் திரு ஆலவாயிலிருந்து வெளியாகும் அருளமுதமே வைராக்கிய சித்தமுடன் நம் மனதினை வென்று மெய்ஞ்ஞானப் பாதையில் நாம் முன்னேற வழிவகை செய்யும். எதற்கும் முதற்பொருளாக விளங்கும் அழிவில்லாப் பொருளுக்கே முகமது, அகமது என்னும் பெயர். ஒரு புள்ளியிலிருந்து விரிந்து வந்த அமானிதத்தை தீன் எனும் திருவடியை இன்னது இன்னதென இன்னதுக்கு இன்னதென தெளிவாக உணர்ந்து அறிந்து வந்து அருள்பவர்களே முகையதீன். மெய் மகத்துக்களின் முன்பாக நாம் அடையும் தோல்வியே எமன் எல்லையில் வெற்றி பெறுவதற்கான ஜெயமாக அமையும். மெய்வழியின் உளவான பிடரி மார்க்கமாக கோடி மனுக்கு ஈந்தாலும் குறையாத இருதய சிமிழில் இருக்கும் மையே தேரைந்து மந்திரம். இதனை கைக்கொள்வதற்கு அடமான ஒரு திடமும் பாடும் வேண்டும். ஞானசபையாக மலர்ந்து ஓங்கி, நிலவுலகெல்லாம் நல்ல கதி நிலை விளங்கி நம்மை உய்விப்பதற்காக வந்ததுவே ஆதி மார்க்க னீதி அவை என்ற குருகொண்டலின் ஆசீர்பாதத்துடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 19-04-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் 207 - குருபிரான் அருளமுதம்:** சர்வ மதங்களின் அடி நாதமாகிய மறலி கை தீண்டாமை எனும் உன்னத செயலை உணர்ந்து இறை பொருளுடன் இரண்டறக் கலந்த சாயுச்ய அரசர்களே சர்வத்திராளும் ஓர் குலம் என்பதை வேத சாட்சியாக உணர்ந்தவர்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - சடையுடையாளர்(பிரசங்கி) - அதிகாரம் - 6:15** ஏதேன் தோட்டத்தில் நிர்வாணிகளாய் வாழ்ந்த ஆதாமும் ஏவாளும் சர்ப்பத்தின் சொல் கேட்டு அங்கிருந்த கனியைப் புசித்து பிறவி சுழலில் சிக்கியது, கருப்பை



Copyright © AMNA Trust, Chennai 

கூடி கலந்த வினைத் தொடரை விலக்கும் கர்த்தரின் கருணையால் முக்குணமற்று நிர்க்குணமாம் நிர்வாண நிலையை மீண்டும் பெறும் தேவ இரகசியச் செயலாகும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* அண்ட பிண்ட நிறை கிருபாகரனே குரு வடிவெடுத்து பையத்தெனும் உபதேசம் அருளி தௌஹீதெனும் பரிசுத்த தலத்தில் நம்மை குடியேற்றி குலம் தழைத்து வாழச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* இறைவனின் இரகசியப் பெட்டகமே மனிதன். குத்தூபு எனும் முதற் பொருளின் மகிமையை குருவருளால் இதயாசனத்தில் உணர்ந்து சமத்துவ, சமாதான, சமரசத்தை அடைந்த மனுவே சூக்கும வடிவாய் ஆட்சி புரியும் இறைவனை அறிந்து தேவனாகிறான்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* காருண்ய மூர்த்தியாம் குருபிரான் நடத்தும் திருச்செயல்களின் காரணத்தின் கருத்தறிந்த மாணாக்கனே சகல சம்பத்தும் பெற்று சற்பாத்திரனாகி தௌஹீது எனும் திருத்தலத்தை அடைகிறான்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* ஐம்புல நுகர்வுக்கும் அப்பாலிருந்து வான வேதாந்த சஞ்சீவியாக வரும் வள்ளலின் உயிராணித் திருவசனம் மூலம் நம் மனக்குதிரையை அடக்கி ஆறாம் அறிவை அறிந்து ஐம்பூத கணங்களின் பதியாம் கணபதியுடன் கலந்து வாழ்வதே பேரின்பம். ஆரணம் கடந்த பூரணக் கடலாம் ஆண்டவன் அருளும் பரிபூரண விந்தை ரகசியத்தை நம் உள்ளத்தில் உணரச் செய்பவரே சம்பூர்ணராகிய சற்குருபிரான். தோன்றாத் துணையாக தொடர்ந்து நின்ற எம்மானாக, நம்மைக் காக்கின்ற கருணை வடிவாம் மஹபூபின் மகத்துவத்தை உணர்ந்து பேரின்ப பெருவாழ்வு வாழ்வோம் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 20-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

*ஜீவசகோதரர் கௌதம்:*

ஓர் மெய்க்குருபிரான் அருளும் உளவின் படியே நம் வினையை தீர்த்து நல்ல கதி பெற முடியும். அந்த வித்தில்லா வித்தே நம் அறியாமையை நீக்கி சமத்துவம் உண்டாகச் செய்யும். நம்மிடம் மயனத்துள் மயனமாய் பரிசுத்த ஆவியாய் விளங்கும், அணுவில் அணுவினை ஆதிப்பிரானை, தரிசிக்கச் செய்ய வல்லவரே மெய்க்குருபிரான். அமானிதப் பொருள் வாங்கி வந்த மனுவின் சிரசில் இருக்கும் ஜோதிப் பிரகாசமே முத்தொழில் செய்யும் கடவுளரின் இருப்பிடம். திருவண்ணாமலையில் தீபம் ஏற்றும் முன் ஆடும் அர்த்தநாரியின் ஆட்ட ரகசியம் ஆசான் அருளால் அறிந்தவரே தன்னுள் விளங்கும் ஞான தீபத்தை தரிசனையாகக் காண்பர். சாலை ஆண்டவர்கள் மாண்ட மனு அனைத்தையும் மண்ணில் இருந்து எழுப்பும் தேவரகசியச் செயலே இயேசு பெருமான் உயிர்த்தெழுந்த ரகசியமும், பூமாதேவியை பாதாளத்திலிருந்து மீட்டெடுக்கும் வராக அவதாரத்தின் ரகசியமுமாகும். மரணத்தின் கூரை அறியாது நமக்குள் இருக்கும் அசுரனை சங்காரம் செய்யும் பெரியோர்களின் செயலே அசுர-சம்ஹாரம். அவர்கள் நம்மை சாமுன் சாகப் பழக்கி சாகாத நித்திய வாழ்வில் குடியேற்றி வைக்கும் செயலே நாம் உயிர்த்தெழும் நாள்.

*ஜீவசகோதரர் குமார்:*

மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம் இவற்றை வாழும் காலத்தில் தன்னில் செயலாக உணர்ந்த அமரர்க்கே அடக்கம் வாய்க்கும். ஆதியில் வாங்கி வந்த அமானித சீதனக் கடனை அடைத்தவர் எமனை வென்று வெற்றிவாகை சூடுவர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai May 2025

## 20-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓங்காரத் தொனியான கபாலத்தே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி கவி சந்திரசேகர்:* சூழ்நிலைக்கு ஏற்ப செழித்து வளரும் விதை போல் மெய்ஞ்ஞானப் பயிர் செழிப்பதும் ஆசானின் நாத தொனியை உணர்வுடன் செவி மடுப்பதைப் பொறுத்தே அமையும். வித்தில்லா வித்தாகிய ஆசானின் நாதமே என்றும் பொய்யகத்து உறைந்துள்ள நம் மனத்தை அறிவாக மாற்றி அகவிளைவில் குடியேற்றுகிறது.

*ஜீவசகோதரர் மகேஷ்:* ஆசான் தன் நாத தொனியால் நரனின் தேகமாகிய மண்ணில் மாண்டு கிடக்கும் மனுவை எழுப்பி வினையறுத்து வாழ்நாள் வீணாகாமல் பிறவாமை பெற அருள் புரிகிறார்கள்.

*ஜீவசகோதரி புன்னகை:* குழந்தை முதல் பல ரூபம் தாங்கி இறுதி வரை மரணம் நோக்கிய பயணத்தில் இருக்கும் நரனை மனுவாக்கி தேவனாக்கி இறை பொருளுடன் இரண்டற கலக்கச் செய்து ஜென்ம சாபல்யம் பெறச்செய்வது ஆசானின் அருள் ஒன்றே.

*ஜீவசகோதரி மாலதி பாஸ்கர்:* இறை வடிவங்கள் கைலாயம் செல்ல பயன் படுத்திய வாகனங்கள் யாவும் ஐயறிவு பெற்ற ஜீவ பேதங்களே. அதுபோல் நமது இறை திரு பயணத்தின் வாகனமாகத் திகழ்வது ஆசானின் நாதமே. இதையே ஆதியிலே வார்த்தை இருந்தது என்கிறது சத்திய வேதம்.

*ஜீவசகோதரி வைஷ்ணவி:* மனுவின் மூன்று வினைகளும் காலத்துள் அடக்கம். காய மன வாக்கினால் நாம் செய்த கன்மம் காய மன வாக்கினால் கடக்க ஆசான் அருள் வேண்டும். அதனைத் தேடிப் பெற வேண்டியதே மனுவின் கட்டாயக் கடமை.

*ஜீவசகோதரர் கவனமணி:* ஆசான் அருளால் அறிவு பிறப்பு எடுக்கும் போது தீர்வதே செய்நன்றி. நித்திய வாழ்வில் குடியேற சாகாக் கல்வியை பழக வைக்கும் ஆசானின் உதவி இவ் வையகத்திற்கும் வானகத்திற்கும் மேலான ஒன்றாகும்.

*ஜீவசகோதரர் ஏகாம்பரம்:* நமது உள் நினைவு அறிவாகவும், வெளி நினைவு மனமாக புத்தி சித்தம் இவற்றுடன் சேரும் பொழுது நான் எனும் அகங்காரமாக மாறுகிறது. ஒரு மெய் ஆசானின் அருளால் மனதை அறிவாக மாற்றுவதே முக்தி பெறும் வழி.

*ஜீவசகோதரர் நாகலிங்கம்:* புற உலக வாழ்வில் துக்கமும் துயரமும் உண்டாவது நான் எனும் அகங்காரம் மூலமே. நமது ஆணவம் அறுத்து அகத்தை தூய்மையாக்கி உலகப் பற்றினை நீக்கி அறிவை உணரச் செய்பவரே மெய் ஆசான்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*எல்லாச் சாஸ்திரங்களிலும் வைத்து இக்கீதா சாஸ்திரம் இரகசியமானது. னன்றாய்ப் பரீக்ஷித்து, ஆன்ம சுத்தியுள்ள சாதகனுக்கு இதனைச் சொல்லவேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai May 2025

## 23-04-2025 ~ புதன்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய பிள்ளைத் தமிழ் பாடலில் **கலை மலையரசன் மகள் மதியரசி…** என்ற பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
நிலையா மனமது நிலை பெறச் செய்யும் பத்தியத் திடமும் லௌகீக முனைபட நாட்டிய பையத்தாகிய தௌஹீது காமீலும் சேர்ந்து புனையப் பெற்றதுவே பிள்ளைத் தமிழ். தன்னை அறியும் போது பிரம்மமாகவும் அறியாத போது அகங்காரமாகவும் விளங்கும் நித்தியப் பொருளே ஜீவன். அவரவருள் தோன்றாத் துணையாக விளங்கும் வெளிச்சப் பொருளே ஞானசூரியன். வாழும் கலை வல்லாரிடம் பெறும் மந்திரஸ்திரமே ஜீவேசத்தகை வாழ்வுக்கான வழியாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் 6ன் தொடர்ச்சி - ஜீவசகோதரர் குமார்:** மனிதன் தான் பெற்று வந்த அமானிதத்தின் அருமை அறியாமல் அழிவுக்கே செலவிடுகிறான். பவக்கோள் தலையெடுத்து அக உலகில் விளையும் விபரீதமே தீத் தண்ணீர் ஊறி வருவதற்கான அடையாளம். பவக்கோள் அதிகரிக்கும் காலத்தில் நான் வருவேன் என பகவான் சொன்ன சத்திய வாக்கினை அறிவை அறிந்த மக்களே அறிவர்.

*ஜீவசகோதரர் கௌதம்:* நாம் பெற்ற பெரும் பரிசே பேசும் பரிசாக வரும் மெய்க் குருபிரான். அவர்களே நம் இருதயச் சிமிழில் விளங்கும் கருமையை நம் புருவத்திடையே தீட்டுகிறார்கள். மேலும் காலம் கடந்த எல்லையில் விளங்கும் காலாதீதனை அடைந்து ஐக்கியமாகும் பயணத்தில் நம்மை ஆக்கி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* புறவுலக வாழ்வை விட்டு அக உலக வாழ்வில் நம்மை ஐக்கியமாகச் செய்பவரே அருளாளர். மஹபூபாக வருகின்ற பெரியோர்கள் காப்பாக இருந்து இரட்சிப்பதின் மூலமே தெளிவுடன் திருமேனி கண்டு, திருவார்த்தை கேட்டு திரு நாமம் செப்பவும், திரு உரு சிந்திக்கவும் முடியும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 26-04-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்கள் அருளிய **பஞ்ஞாட்சர ஓம் னமசிவ யதுவின…** எனும் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
குருவின் அருளால் பஞ்சைகள் போல் இருந்து பஞ்சகோச உடல்களில் உள்ள பஞ்சாட்சரத்தை கைவசமாக்கியே மனு தன் பாச வேர் அறுக்க முடியும். அறிவு உடலான ஆசானின் நாதமே தஞ்ஞை மாநகரான அறிவிருக்கும் தலத்தில் நம்மை சேர்த்து ஆனந்த உடலில் குடியேற்றி பிறப்பென்னும் பேதமையை நீக்குகிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 208 - குருபிரான் அருளமுதம்:** ஆசானின் திருவாய்மொழி நம்மை அசையா னிலையை ஆள வைத்து அழைத்துச் செல்லும் மார்க்கமே காசி யாத்திரை, ஹஜ் யாத்திரை என்பதாகும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்: பிரசங்கி - 6: 2, 3, 7 -** தேவன், இவ்வுலகில் சர்வ சம்பத்தும், மனுவுக்கு ஆறாவது அறிவும், அளவிலா ஆசையும் வைத்துப் படைத்தது, பிரம்மவித்தை செயல் பழகி தன் ஜீவன் நஷ்டம் அடையாமல் காக்கவும் அனித்திய வாழ்வை விட்டு நித்திய பேரின்ப வாழ்வை வாழ்வதற்குமே ஆகும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* ஆசான் அருளும் மெய்ஞ்ஞானத்தால் மனு, கோள்களின் தலைவனாகிய மனம் மற்றும் அதன் ராசி நிலைகளின் பிடியிலிருந்து விடுபட்டு காலத்தின் ரகசியம் அறிந்து தன்னை உணரும் நாளே மெய்ஞ்ஞான நாள்.

**தௌஹீது காமீல் - குருபிரான் அருளமுதம்:** வேத ஆகமங்கள் யாவும் அவரவரின் புகழுடம்பின் உன்னதத்தையே பேசுகின்றன. ஆசான் அருளால் மனதை பாழிலே விடாது மும்மலத்தை வென்று பஞ்ஞாட்சரத்தின் வசம் ஆனவர்களே பஞ்சைகள். ஜலத்தினில் அக்கினி உருவான மனம் காற்றின் துணையுடன் எரியும் எமனாக உள்ளது. பரிசுத்த ஆவியின் தயவால் மறுபிறப்பு பெற்று ஞானிகள் அருளிய 118 கணக்கின் ரகசியம் அறிந்து சத்திய தேவ பிரம்ம குலத்தினராக வாழ்வதே இராஜ சன்னியாச னிலை. நிலவாகிய அறிவின் நிழலில் படிந்த மக்களுக்கே இம் மெய்ச்செயல் கைவரவாகும் என குருபிரான் அருளியதும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 27-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*
மெய்க் குருபிரான் நம்மிடம் ஆறாம் அறிவைத் துலங்கச் செய்து நம் அறியாமை நீக்கி அறிவைத் துலங்கச் செய்கிறார்கள். சத்தியமும் வழியும் ஜீவனுமாய் இருக்கின்ற அவரவரின் நாமத்திற்குரிய பிரகாசப் பொருளை உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்தில் அறியச் செய்கிறார்கள். தீக்குணப் பேழையாகிய வாய், மூக்கு, கண், செவியால் உண்டாகும் மாயச்சுழற்சியில் இருந்து மாற்றிப் புண்ணியனாக ஆக்கும் மெய் ஆசானின் செயலே மேல் நோக்கம். ஜலமாகிய மனதில் அறிவு எனும் விளக்கை ஏற்றுவதே வள்ளலார் ஜலத்தில் விளக்கேற்றிய இரகசியமாகும். எத்திசையிலும் அண்ட பிண்ட நிறை கிருபாகரனாக விளங்கும் பிராணமய கோசத்தின் தத்துவத்தை உணர்ந்து பார்க்கக் கூடிய ஆவிப்பொருள் நாம் தான். ஆசான் தன் மலர்க் கையின் ஓசை கொண்ட நடனத்தால் இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் விளங்கும் சூக்கும தேகத்தை அறியச்செய்து எமபயத்திலிருந்து நம்மை மீட்கிறார்கள். சண்முகன், னான்முகன், சராசர பொருளனைத்தும் அவரவர் முகத்தில் காட்டி அறிவில் ஏற்றம் காணச் செய்கிறார்கள். பஞ்சபூதங்களை நம்மிடம் பஞ்சாட்சரமாக மாற்றி சைவ நெறியில் புகுத்தாட்டி ஊசி முனையாகிய தமர் வாசல் கண்ட உத்தமன் ஆக்கி வைக்கிறார்கள். நம்மை இறைவனுடன் பேதமின்றி கலக்கச் செய்யும் குருபெருமானின் திருப்பார்வையில் நாம் அழகாக இருப்பதற்கு அவர்களின் சொற்படி கேட்டு நடப்பதே நன்மையைப் பெற்றுத் தரும் என்னும் பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*னற்கருமங்னளின் பரிபாகத்தினால் சித்த சுத்தி யுண்டாகிறது. (அதற்குப் பின்) னன் முயற்சியுடன் மெய்யில் ஈடுபடுபவனுக்கே புத்திமானானவன் இந்நக் குருகீதையைச் சொல்லவேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 27-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **உய்யவே எனக்கும் உலகுய்யவே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



*ஜீவசகோதரர் பாண்டி:* வெளிச்சம் இருள் என அவரவருள் இருந்து அறிவிக்கும் நிழல் சாயலற்ற நீள் உடலே ஜீவனெனும் பிரகாசப் பொருள். ஆசான் அருளால் நாள் தோறும் சூக்கும தேகத்தில் நுழைந்து பழகும் மெய்க்கல்வியால் பெறுவதே மெய்யுணர்வு.

*ஜீவசகோதரி அஞ்சனா:* நாளும் கோளும் வயது வாழ்நாளாக உள்ளது. புலன்வழி செல்லும் மனதை, குருவருளால் அசைவற்ற குணக்குன்றான அறிவாக மாற்றி மெய் வணக்கம் பழகி வர பேரின்பம் கைவரவாகும்.

*ஜீவசகோதரர் கருப்பசாமி:* குளவியின் ரீங்காரம் போன்ற ஆசானின் நாதமே நம் அறியாமை எனும் இருளகற்றி அறிவு வடிவாக்குகிறது. ஆசான் தயவால் அனு தினமும் சாமுன் சாகப்பழகி வரும் செயல் மூலமே காலமற்ற இடத்தில் குடியேறி நித்திய வாழ்வு வாழ முடியும்.

*ஜீவசகோதரி தீபா முருகேசன்:* பேரொளிப் பிழம்பாக வரும் குருவின் நாதமே நம் ஆறாம் அறிவை பிரகாசிக்கச் செய்கிறது. எழுவகை தோற்றத்தில் இல்லாத நரனை சங்காரம் செய்து மனுவாக்கி பஞ்சாட்சரப் பொருளும், நான்கு தேக ரகசியமும், மாதா பிதா குரு தெய்வம் என நம்மை ஆட்கொண்டு மெய்த் துலக்கத்தில் ஆக்கி வைப்பவரே குருபிரான்.

*ஜீவசகோதரி அன்னலட்சுமி:* அழியாத ஆன்ம நிலையை உயிருள்ள போதே பழகித் தேற அஞ்ஞான மன இருளகற்றும் ஆசானின் வாய்மை எனும் சொல்லக விளக்கே அருட் பெருஞ் ஜோதி, மகர ஜோதி. அதனை அடைய நாம் படும் பாடே வழிபாடு.

*ஜீவசகோதரர் செல்வகுமார்:* மனு தன் அசல் தத்துவங்களை அறிய ஆன்றோர்கள் உண்டாக்கிய நகல்வடிவே கோவில்கள். குருவே சிவனாக ஜீவனாக அறிவாக உள்ளதை அவரருளால் அறிவை அறியும் போதே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் பாலசுப்ரமணியன்:* குருவின் இரக்கத்தால் செம்பொருள் கண்ட மனுவே பிறவாமை பெறுகிறான். அவரருளால் ஏழாம் பிறப்புடலம் எடுத்தே நம் அமானிதக் கடனை தீர்க்க முடியும். குறை மனம் கடந்து, அறிவு வடிவு நாம் என ஆசான் அருளால் அறியும் போது காயத்ரி எனும் ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாகலாம்.

*ஜீவசகோதரி வாசுகி:* ஒரு மெய்க்குருவின் மூலம் நமது மனம் எமன் கை வசப்படாமல் மறுபிறப்பு அடைவதே மனோலயம். இக்கடத்தில் இருக்கும் இறைவனை அறிந்து மெய்வழி மேடேறி, வேதமுடியாகிய அலீபு-லாம்-மீமை அறிந்து, பிறவாமை பெறும் இடமே ஞான ஆகாயப் பெருவெளி.

*ஜீவசகோதரர் செல்வம்:* வித்தில்லா வித்தின் மூலம் நரனை மனுவாக்கும் குருவின் செயலே பிரம்மவித்தை. மெய்க் குருபிரான் கற்பிக்கும் மார்க்கமே சன்மார்க்கம். யோக உணவின் மூலம் ஜீவன் செழிப்புற்று அறிவுத் தெளிவு பெறுவதே மறுபிறப்பின் இரகசியம்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் குமார்:* அன்பெனும் விசேஷமே சிவனெனும் வாடாத தீபம். அதுவே சுடாத தீ, மகதி எனும் மகா தீ, ஆதி என்பதாகும். குரு நம் மேல் வைக்கும் அன்பே பிறவிப் பிணி தீர்க்கும் மாமருந்து. அவரின் திருக் கொரலே மெய்யான சாலைத் தமிழ் எனும் சுவிசேஷ நற்செய்தி. அதனை அனுதினமும் அருளும் உத்தியோவனமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திர பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## இசை வகுப்பு
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 06-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஞான முறையீடு பாடலாகிய **முடியாகிய மூமீன்...** என்ற பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஆதி மான்மியம் மூல பண்டாரப் பருவத்தில் வரும் **ஆதி மூல விதிவேச வாச...** எனும் பகுதி மனனம் செய்து பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 13-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **புல்லும் பூமி...** எனும் குரு ஸ்தோத்திரம் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஆதி மான்மியம் ஜீவ சிம்மாசனப் பருவத்தில் **ஜீவாமிர்த்த ஊற்றெழும்...** என்ற பகுதி பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 20-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **வாவிண் மேகக் குடை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. சென்ற வாரம் பயிற்சி வழங்கப் பெற்ற ஆதி மான்மியம் ஜீவ சிம்மாசனப் பருவப் பகுதியே மீண்டும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 27-04-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய குருமணி மாலை பாடலான **சத்தியம் திரண்ட...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. சென்ற வாரம் பயிற்சி வழங்கப் பெற்ற ஆதி மான்மியம் ஜீவசிம்மாசனப் பருவத்தில் **ஜீவாமிர்த்த ஊற்றெழும்...** என்ற பகுதி பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*ஒருவன், சக்தனாயினும் அசக்தனாயினும் தேசிகரது பாதத்தைச் செவ்வையாய் ஆசிரயிப்பானாயின், அதாவது எதார்த்த ஒட்டுதலோடு புகலிடமாகக் கொள்வானாயின், அவன் இந்த மனிதப்பிறப்பு எடுத்தது பயனுள்ளதாகின்றது. இகபர சௌபாக்கியத்தைத் தருவதாகின்றது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai	

## ஏப்ரல் 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 25-04-2025 ~ வெள்ளிக்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திரு முன்பாக ஜீவபிறவியர் சரவணன் - சங்கவி இவர்களது திருமணம் வெள்ளிக்கிழமை வேலூர் மாவட்டம், கே.வி. குப்பம் தாலுகா, லத்தேரி, அன்னங்குடியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது.




### 30-04-2025 ~ புதன்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திரு முன்பாக ஜீவசகோதரி பாரதி கோபால கிருஷ்ண ஐயர் அவர்களின் புதுமனை குடியேற்ற விழா நடை பெற்றது.






Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 ஏப்ரல் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 56**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**

**Account Number: 50200047470073**

**IFSC: HDFC0000323**

**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 46 – Month: May 2025*